
பக்கங்கள்:-15

காலை முரசு

| முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஐப்பசி 07 | வியாழக்கிழமை | 24.10.2024 | அதிர்வு 83 |
| --- | --- | --- | --- | --- | --- |

## ஐரோப்பிய ஒன்றியத்தினர் சங்கு கூட்டணியுடன் பேச்சு

### சுரேஷ் பிரேமச்சந்திரன் அறிக்கை



(எஸ்.நிதர்ஷன்)

ஐரோப்பிய ஒன்றியத்தின் தெற்காசியப் பிராந்திய இலங்கைக்கான பிரதிநிதி 05



# வரலாற்றுக் கடமையில் இருந்து ஒருபோதும் தவறாது தீவக மண்

## மக்களின் ஆணை தமிழரசுக் கட்சிக்கு கிடைக்கும் என்று சிறீதரன் நம்பிக்கை

(எஸ்.நிதர்ஷன்)

இன விடுதலைப் போரியல் வரலாற்றிலும், அதன் பின்னரான தமிழ்த் தேசிய அரசியல் பரப்பிலும் தீவக மண்ணும், அதன் மக்களும் வழங்கி வரும் பங்களிப்பு மிகக் கனதியானது என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார். 06

# சுன்னாகம் வாசி சிக்கியமையால் அறுகம்பே தாக்குதல் சதி அம்பலம்

(ந.லோகதயாளன்)

ஈரான் மற்றும் பாகிஸ்தான் நாட்டுப் பயங்கரவாத அமைப்புக்களுடன் தொடர்பைப் பேணிய குற்றச்சாட்டில் யாழ். சுன்னாகத்தில் 42 வயதுடைய தமிழர் ஒருவர் கடந்த 20 ஆம் திகதி அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரின் கைதை அடுத்தே அறுகம்பே தாக்குதல் தயாரிப்புப் பற்றிய விவகாரம் அம்பலத்துக்கு வந்திருக்கலாம் என்று கருதப்படுகின்றது.

யாழ். சுன்னாகத்தைச் சொந்த இடமாகவும், கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட ஒருவர் 2016ஆம் ஆண்டு முதல் 05






இலங்கையைப் பொறுத்தவரை அதன் பொருளாதாரம் 'சாண் ஏற முழம் சறுக்கும்' நிலை போன்றுதான் தடுமாறுகின்றது.

விழுந்து கிடக்கும் நாட்டின் பொருளாதாரத்தைத் தூக்கி நிறுத்துவதற்கான ஒரு வழியாகச் சுற்றுலாத்துறை அபிவிருத்தியை அரசு இலக்கு வைத்துக் காய் நகர்த்தியது.

மாதாந்தம் லட்சக்கணக்கில் வந்து குவியும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் மூலம் அந்நிய செலாவணியை பெருமளவில் ஈட்டி, அதன் மூலம் நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தும் முயற்சி கடந்த இரண்டு, இரண்டரை ஆண்டுகளாக முன்னோக்கி நகர்ந்து, நல்ல பலன் தருவதாக இருந்தது.

அதற்கு ஆப்பு வைப்பது போல இப்போது அறுகம்பைத் தாக்குதல் பற்றிய எச்சரிக்கை அறிவிப்பு வந்து எல்லாவற்றையும் குழப்பி நிற்கின்றது. 05

# அரச ஊழியர்களின் சம்பளத்தை ஜனவரி முதல் உயர்த்த வேண்டும்

## தமது அரசின் முடிவு சட்டபூர்வமானது என்கிறார் முன்னாள் ஜனாதிபதி ரணில்



அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிப்பதற்கு நிதி அமைச்சர் என்ற ரீதியில் தாம் எடுத்த அமைச்சரவைத் தீர்மானத்தை உடனடியாக சமகால அரசு அமுல்படுத்த வேண்டும் என்று முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க வலியுறுத்தியுள்ளார்.

"ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றிருந்தால் எதிர் வரும் ஜனவரி மாதம் முதல் சம்பள அதிகரிப்பை வழங்க நாம் திட்டமிட்டிருந்தோம். சம்பள அதிகரிப்பு வழங்கப்படா விட்டால், அதற்காக ஒதுக்கப்பட்ட நிதியானது எமது அரசால் ஒதுக்கப்பட்டது என்பதை உடனடியாக வெளிப்படுத்த வேண்டும்." – என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற விசேட கலந்துரையாடலிலேயே முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு கருத்து வெளி யிட்டுள்ளார்.

கொழும்பில் புதிய ஜனநாயக முன்னணியின் அலுவ லகத்தில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் அவர் மேலும் கூறியதாவது:-

"அரசமைப்பின் 43ஆவது சரத்தின் கீழ் அரசு ஊழியர்க ளின் சம்பளத்தை உயர்த்த நாம் தீர்மானம் எடுத்திருந் தோம். அனைத்து அரச ஊழியர்களிடமிருந்தும் பெறப்பட்ட கோரிக்கைகளைப் பரிசீலித்து சம்பள அதிகரிப்பை வழங்கத் தீர்மானித்திருந்தோம்.

சம்பள உயர்வுக்கான கோரிக்கை நியாயமானது. 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது, ஊதியத்தின் மதிப்பு 50 சதவீதம் குறைந்துள்ளது. மக்கள் மிகவும் நெருக்கடியிலேயே வாழ்ந்தனர். அவர்கள் கடனில் மூழ்க வேண்டியிருந்தது. சிலர் தங்கள் சொத்துக்களை விற்க வேண்டியிருந்தது. நான் பொறுப் பேற்ற ஆரம்ப காலத்தில் நிவாரணம் கொடுக்கும் நிலை இருக்கவில்லை. அதை நாட்டுக்கு அறிவித்தேன். சிலர் சம்ப ளத்தை இருபதாயிரம் ரூபாவால் உயர்த்தச் சொன்னார்கள்.

2024இல் பத்தாயிரம் ரூபா அதிகரிப்பை வழங்கினோம். ஆனால், அந்தப் பத்தாயிரம் ரூபா போதாது. பணத்தின் மதிப்பு 50 சதவிகிதம் குறையும்போது, மக்களுக்குப் பிரச்சினைகள் ஏற்படும். சில குழந்தைகள் காலை உணவு இல்லாமல் பாடசா லைக்குச் செல்கின்றனர். பல குடும்பங்களில் உள்ள குழந்தை கள் பகுதிநேர வகுப்புகளுக்குச் செல்வதை நிறுத்திவிட்டனர்.

சமூக அமைப்புகள் சிதைவதை நான் விரும்பவில்லை. இதன்படி, அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பில் ஆராய உதய செனவிரத்ன குழு நியமிக்கப்பட்டது. அவர்களது சிபாரின் பிரகாரம் சம்பளத்தை உயர்த்த முடியாது என்று திறைசேரியின் செயலாளர் கூறினார்.

ஜனாதிபதியின் செயலாளருடன் கலந்துரையாடி உரிய சம்பளத்தை எவ்வாறு அதிகரிப்பது என்பதைக் கண்டறியு மாறு கூறினேன். பின்னர், பேச்சுவார்த்தை நடத்தி உடன்பாடு ஏற்பட்டது. ஒரே ஆண்டில் சம்பள உயர்வை வழங்காமல் 50 சதவீதத்தை ஓராண்டிலும், மீதி 50 சதவீதத்தை மறுவரு டத்திலும் வழங்க முடியும் என்று தீர்மானிக்கப்பட்டது.

மீண்டும் எனது செயலாளராக இருந்த சமன் ஏக்கநாயக் கவுடன் முதலில் கலந்துரையாடினேன். எனது பொருளாதார ஆலோசகர் கலாநிதி சமரதுங்க மற்றும் நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன ஆகியோருடனும் கலந்து ரையாடினேன். இறுதியில் இந்தச் சம்பள உயர்வை வழங்குவ தற்கு உடன்பாட்டுக்கு வந்தோம்.

அதன் பின்னர்தான் அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிப்பது தொடர்பான அமைச்சரவைப் பத்திரத்தைச் சமர்ப்பித்தேன். அந்த அமைச்சரவை ஆவணத்தில் ஜனாதி பதி என்ற முறையில் நான் கையெழுத்திட்டுள்ளேன். அந்த முடிவுக்குத் திறைசேரியின் கருத்துகள் தேவையில்லை. அமைச்சரவை எந்த முடிவையும் எடுக்கலாம். நாங்கள் ஐக்கிய இராச்சியத்தின் அமைச்சரவை கையேட்டின்படி தான் செயற்படுகின்றோம்.

எனது நண்பர் விஜித ஹேரத் இதற்கு முன்னர் அமைச்சரவை யில் இருந்தார் என நான் நினைக்கவில்லை. அரச ஊழியர் களின் சம்பளத்தை அதிகரிப்பதற்கு எமது அரசு எடுத்த தீர்மானம் முற்றிலும் சட்டபூர்வமானது.

அமைச்சு என்பது ஓர் அமைப்பு. அமைப்புக்குச் சட்டங்கள் இல்லை. அரசமைப்பின் 52 ஆவது பிரிவின் கீழ் அமைச்சரின் தலைமையில் அமைச்சு உள்ளது." – என்றார்.

# 75 லட்சம் ரூபா பெறுமதியான பீடி இலைகள் கைப்பற்றப்பட்டன







புத்தளம் – பாலாவி பகுதியில் 75 லட்சம் ரூபா பெறுமதி யான பீடி இலைகள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் சந்தேக நபர் கள் தப்பியோடியுள்ளார் என கடற்படையினர் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் நேற்று புதன்கிழமை இடம்பெற்றுள்ளது.

பீடி இலைகள் லொறியில் கடத்திச் செல்வதாக தம்ப பண்ணி கடற்படையினருக்குக் தகவல் கிடைத்துள்ளது.

இதனடிப்படையில் மேல்கொண்ட சுற்றிவளைப்பின் போதே லொறியை நிறுத்திவிட்டு சந்தேக நபர்கள் தப்பிச் சென்றுள்ளனர்.

இதன்போது, மேற்படி லொறியை சோதனையிட்டபோது சுமார் 60 மூடைகளில் 1535 கிலோ கிராம் பீடி இலைகள் கைப்பற்றியுள்ளனர்.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட பீடி இலைகள் சுமார் 75 லட்சம் ரூபா பெறுமதியென மதிப்பிடப்பட்டுள்ளது.

மேற்படி பீடி இலைகள் அனுமதிப் பத்திரமின்றி சட்டவிரோ தமாக இந்தியாவிலிருந்து கடல்மார்கமாக கொண்டுவரப் பட்டிருக்கலாமென சந்தேகிப்பதாக கடற்படையினர் தெரிவித் தனர்.

கைப்பற்றப்பட்ட பீடி இலைகள் மற்றும் கடத்தலுக்கு பயன்படுத்தப்பட்ட லொறி ஆகியவற்றை புத்தளம் கலால் வரித் திணைக்களத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

மேலதிக விசாரணைகளை புத்தளம் கலால் வரித் திணைக்கள அதிகாரிகள் முன்மெடுத்து வருவதாக இதன்போது தெரிவித்தனர்.




# காலையில் அம்பி; மாலையில் அந்நியன்; இப்படி நடக்கிறார் வைத்தியர் அர்ச்சுனா!

## வைத்தியர் பிறேமினி குற்றச்சாட்டு

(பிரபாகரன் டிலக்சன்)

வைத்தியர் அருச்சுனா காலையில் அம்பி போன்றும் மாலையில் அந்நியன் போன்றும் நடந்து கொள்கின்றார். அவரை பற்றி விளங்கி கொண்ட பலர் தற்போது அவரை புறக்கணிக்கின்றார்கள் என வைத்தியர் பிறேமினி தெரிவித்துள்ளார்.

யாழ் . ஊடக அமையத்தில் நேற்றைய தினம் புதன் கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். மேலும் தெரிவிக்கையில் –

தமிழ் மக்கள் கூட்டணியின் பெண் வேட்பாளர் மிதிலைச் செல்வி, வைத்தியர் அருச்சுனாவிடம் துண்டு பிரசுரத்தை கையளித்த போது , அவர் அநாகரிகமான நடந்து கொண்டமையை நான் வன்மையாக கண்டிக்கிறேன்.

வைத்தியருடன், அவரது சக வேட்பாளரான பெண் சட்டத்தரணி ஒரே மேசையில் இருந்து சாப்பிட்டுக்கொண்டு இருக்கும் போதே இந்த விடயம் நடைபெற்றது. ஆனால் அவர் தான் ஒரு தனிப்பட்ட தொலைபேசி உரையாடலில் இருந்தமையால், அதனை அவதானிக்கவில்லை எனக் கூறியுள்ளார். அது முற்றிலும் பொய்யாகும்.

ஒரு பெண்ணாகவும், சட்டத்தரணியாகவும் பொறுப்பாக நடந்து கொள்ளவில்லை. அது எங்களுக்கு மிகுந்த மனவருத்தத்தைத் தருகின்றது.

துண்டுப் பிரசுரத்தை பெண் வேட்பாளர் கையளித்த போது வாங்க விரும்பாவிடின் வாங்காது தவிர்த்து இருக்கலாம். அவரை அவ்வாறு அவமானப்படுத்தியிருக்கக் கூடாது.

வைத்தியர் அருச்சுனா காலையில் அம்பி போன்றும் மாலையில் அந்நியன் போன்றும் நடந்து கொள்கின்றார். அவரைப் பற்றி விளங்கிக் கொண்டோர் பலர் தற்போது அவரை புறக்கணிக்கின்றார்கள்.

தான் நாட்டுக்காக சிறை சென்றேன் என்கிறார். அவர் நாட்டுக்காக சிறை செல்லவில்லை. மற்றவர்கள் மீது அவதூறு பரப்பியமைக்கு , அவர்கள் மீதான குற்றச்சாட்டுக்களுக்கு ஆதாரங்களை சமர்ப்பிக்காது, நீதிமன்ற பிணை நிபந்தனைகளை மீறிய குற்றத்திற்காகவே சிறை சென்றார்.

அதேவேளை இவர் தொடர்ந்து வைத்தியர்களை அவமானப்படுத்தி வருகின்றார். அண்மையில் கூட வைத்தியர் த.சத்தியமூர்த்தியை தரக்குறைவாக பேசும் வீடியோ ஒன்றை சமூக வலைத்தளத்தில் பகிர்ந்துள்ளார். இவ்வாறு அவர் தொடர்ந்து வைத்தியர்களை அவமானப்படுத்துவதனை ஏற்றுக்கொள்ள முடியாது. – எனத் தெரிவித்தார்.

# சோள இறக்குமதியினை குறைக்குமாறு அறிவுறுத்தல்

அடுத்த வருடம் சோள இறக்குமதியை 150,000 மெற்றிக் தொன்னாக குறைக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சின் செயலாளர் எம்.பி.என்.எம் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

இலங்கை தற்போது வருடாந்தம் சுமார் 300,000 மெற்றிக் தொன் சோளத்தை இறக்குமதி செய்வதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

சோள இறக்குமதி செலவுக்காக ஒதுக்கப்படும் அந்நியச் செலாவணியைக் குறைக்கும் நோக்கில் குறித்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதேநேரம், தற்போது சோள உற்பத்தியை அதிகரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வெளிநாடுகளிலிருந்து விதைகளை இறக்குமதி செய்யாமல் உள்நாட்டிலேயே தேவையான விதைகளை உற்பத்தி



செய்யும் வேலைத்திட்டமும் தயாரிக்கப்பட்டு வருவதாகவும் விவசாய அமைச்சின் செயலாளர் எம்.பி.என்.எம் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

# நாட்டின் எந்தப் பகுதிகளுக்கும் பாதுகாப்பு அச்சுறுத்தல் இல்லை



## பொலிஸ் பேச்சாளர் தெரிவிப்பு

"அறுகம் குடாவில் தாக்குதல் இடம்பெறலாம் என்பது ஒக்டோபர் 7 ஆம் திகதியே தகவல் கிடைத்திருந்தது. நாட்டில் வெளிநாட்டு பிரஜைகளை இலக்குவைத்து தாக்குதல் இடம்பெறலாம் என புலனாய்வு தகவல்கள் கிடைத்திருந்தன."

– இவ்வாறு பொலிஸ் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"தொடர்ந்து அந்த பகுதியில் பாதுகாப்பை பலப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

அந்த பகுதியில் 500 பொலிஸாரும் விசேட அதிரடிப்படையினரும் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

அந்த பகுதியில் பாதுகாப்பை பலப்படுத்தும் நடவடிக்கைகளில் புலனாய்வு பிரிவினரும் பாதுகாப்பு படையினரும் ஈடுபட்டுள்ளனர்.

கொழும்பிற்கோ நாட்டின் ஏனைய பகுதிகளிற்கோ பாதுகாப்பு அச்சுறுத்தல் என புலனாய்வு தகவல்கள் எதுவும் தெரிவிக்கவில்லை. இதன் காரணமாக மக்கள் அச்சமடையவேண்டியதில்லை."– என்றார்.

# யாழ்ப்பாணம், கொழும்பில் மூவரில் ஒருவருக்கு நீரிழிவு

## வைத்தியர்கள் எச்சரிக்கை

இலங்கையில் தற்போது மூவரில் ஒருவருக்கு நீரிழிவு நோய் ஏற்பட்டுள்ளது என்று இலங்கை நீரிழிவு வைத்தியர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதனடிப்படையில், கொழும்பு மற்றும் யாழ்ப்பாணம் மாவட்டங்களில் அதிகமான நீரிழிவு நோயாளர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர் எனவும், அதில் நான்கில் ஒருவருக்கு நீரிழிவு பாதிப்பு அதிகரித்துள்ளது எனவும் வைத்தியர்கள் எச்சரித்துள்ளனர்.

மேலும், இந்த மாவட்டங்களில் சுமார் 40 வயதுக்குட்பட்டவர்களுக்கு நீரிழிவு நோய் ஏற்பட்டுள்ளது எனவும், அதில் 33 விகிதமானவர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் வைத்தியர்கள் குறிப்பிடுகின்றனர்.

சமீபகாலமாக நீரிழிவால் பாதிக்கப்பட்டவர்கள் இதயம் தொடர்பான நோய்கள், கை, கால் நரம்பு தளர்ச்சி, கண்பார்வையில் குறைபாடு போன்ற பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

இதனால் பாதிப்புகள் அதிகமாகி சிறுநீரகங்களும் செயலிழக்கும் அபாயம் காணப்படுகின்றது எனவும் வைத்தியர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.




மேலும், நீரிழிவுக்கான அறிகுறிகள் இருப்பின் உடனடியாக வைத்தியரிடம் சென்று பரிசோதனை செய்து கொள்ளும்படியும், உணவுப் பழக்கவழக்கங்களில் அதிக கவனம் செலுத்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது எனவும் வைத்தியர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

# மாயமான ஜனாதிபதி செயலக வாகனங்கள்: முக்கிய புள்ளியிடம் சி.ஐ.டியினர் விசாரணை

ஜனாதிபதி செயலகத்துக்குச் சொந்தமான பல கோடி ரூபா பெறுமதியான 12 மோட்டார் சைக்கிள்கள் உட்பட 29 வாகனங்கள் காணாமல்போயுள்ளமை தொடர்பில் ஜனாதிபதி செயலக போக்குவரத்துப் பிரிவின் பணிப்பாளரிடம் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் ஆறு மணித்தியாலங்கள் விசாரணைகளை மேற்கொண்டுள்ளது.

தற்போதைய ஜனாதிபதி செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, பொலிஸ்மா அதிபருக்கு எழுத்து மூலம் முறைப்பாடு செய்தமையை அடுத்து இந்த விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. 9 கார்கள், 12 மோட்டார் சைக்கிள்கள், 6 கப் வண்டிகள் மற்றும் 2 லொறிகள் இவ்வாறு காணாமல் போயுள்ளன.

2022 ஆம் ஆண்டு கணக்காய்வுத் திணைக்களத்தின் கணக்காய்வு அறிக்கையில் ஜனாதிபதி செயலகத்துக்கு ஒதுக்கப்பட்ட 800 இற்கும் அதிகமான வாகனங்களில் 51 வாகனங்கள் காணாமல்போயுள்ளமை தெரியவந்துள்ளது. சில முயற்சிகள் ஊடாக 22 வாகனங்கள் மீட்டெடுக்கப்பட்டுள்ள போதிலும், 29 வாகனங்களைக் கண்டறிய முடியவில்லை.

ஜனாதிபதியின் செயலாளர் அளித்த முறைப்பாட்டின் பிரகாரம் போக்குவரத்துப் பிரிவின் பணிப்பாளர் மகேஷ் ஹேவாவிதாரனவிடம் குற்றப் புலனாய்வுப் பிரிவு விசாரணைகளை மேற்கொண்டுள்ளது.

நீண்ட விசாரணைகள் நடத்தப்பட்ட போதிலும், காணாமல்போன வாகனங்களை மீட்பதற்கு உதவக்கூடிய குறிப்பிடத்தக்க தகவல்கள் எதுவும் அவர் மூலம் வெளிவரவில்லை எனத் தெரியவருகின்றது.

மகேஷ் ஹேவாவிதாரன பதவியைப் பொறுப்பேற்றதிலிருந்து முறையான பதிவுகளைப் பேணி வந்தார் எனவும், ஆனால் பழைய கோப்புகள் காணாமல்போயுள்ளமை குறித்து குற்றப் புலனாய்வுப் பிரிவுக்குச் சாட்சியமளித்துள்ளார் எனவும், காணாமல்போன ஆவணங்களைக் கண்டுபிடிக்க மூன்று வார கால அவகாசத்தை அவர் கோரியுள்ளார் எனவும் தெரியவருகின்றது.

# கொள்ளையர்கள் மீது துப்பாக்கிச்சூடு ஒருவர் படுகாயம்; 4 பேர் தப்பியோட்டம்

இரத்மலானை ரயில் நிலையத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

ரயில் நிலைய வளாகத்தில் கொள்ளையிடும் நோக்கில் பிரவேசித்த ஐவர், அங்கு பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த ரயில்வே பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவரைத் தாக்கிக் காயப்படுத்தியுள்ளனர்.

இதனையடுத்து, ரயில்வே பாதுகாப்பு அதிகாரி, சந்தேகநபர்களை நோக்கித் துப்பாக்கியால் சுட்டார்.

துப்பாக்கிச்சூட்டில் சந்தேகநபர்களில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார் எனவும், ஏனைய சந்தேகநபர்கள் தப்பிச் சென்றுள்ளனர் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேகநபர்களின் தாக்குதலால் காயமடைந்த ரயில்வே பாதுகாப்பு உத்தியோகத்தர் மற்றும் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்கான சந்தேகநபர் ஆகியோர் களுபோவில வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மேற்கு நாடுகள் பலவும் இலங்கைச் சுற்றுப்பயணம் தொடர்பில் தமது பிரஜைகளுக்குப் பயணக் கட்டுப்பாட்டு அறிவிப்புகளை விடுத்திருப்பதால், வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் வருகை பெருமளவில் வீழ்ச்சி காணும் ஏது நிலை ஏற்பட்டுள்ளது.

இந்தப் பயண எச்சரிக்கை காரணமாக இலங்கைக்கான சுற்றுலாப் பயணிகளின் காப்புறுதி கட்டணங்களும் எக்கச்சக்கமாக உயரும் சாத்தியங்கள் உண்டு. இவை காரணமாக சுற்றுலாப் பயணிகளின்வருகைபெரும்அளவில்திடீர்வீழ்ச்சியைக் காணும் என்று அஞ்சப்படுகின்றது.

'தென்னையில் தேள் கொட்ட, பனையில் நெறி கட்டுவது போல' மத்திய கிழக்கில் ஏற்பட்ட யுத்தத்தின் பாதிப்பு பல்லாயிரம் மைல்கள் கடந்து இந்து சமுத்திரத் தீவான இலங்கையில் எதிரொலிக்கின்றது.

மெல்ல மெல்ல விருத்தியான கட்டத்தை நோக்கி நகர்ந்த இலங்கையின் சுற்றுலாத்துறை மீண்டும் பின்னடைவுகளையும் நெருக்கடிகளையும் சந்திக்கப் போகின்றது என்பதற்கான கட்டியம்தான் இலங்கைக்கான பயண கட்டுப்பாட்டு அறிவிப்புகளை மேற்கு நாடுகள் விடுப்பது என்று தோன்றுகின்றது

\+ + +

அரிசி ஆலைகளின் உரிமையாளர்களையும் விவசாயத் திணைக்களத்தின் உயர் அதிகாரிகளையும் அழைத்து ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க பேச்சு நடத்தி இருக்கின்றார்.

மக்களின் பாவனைக்குரிய அரிசியை நியாய விலையில் அவர்களுக்குக் கிடைக்கச் செய்வதை உறுதிப்படுத்துவது ஜனாதிபதியின் நோக்கமாக இருந்தது. ஆயினும் களநிலை வரும் காலத்தில் மிகப் பெரிய அரிசிப் பற்றாக்குறையையும் அரிசி விலை ஏற்றத்தையும் ஏற்படுத்தும் சூழலை நோக்கி நகர்ந்து கொண்டிருப்பதாக விடயம் அறிந்த வட்டாரங்களை எச்சரிக்கின்றன.

அரிசி விலை விவகாரம் அடுத்து வரும் மாதங்களில் அரசுக்குப் பேராபத்தான விடயமாக மாறக்கூடிய சூழல் இருப்பதாக சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் எச்சரிக்கின்றன.

வரப்போகின்ற நெருக்கடியை அநுரகுமார திஸநாயக்காவின் அரசு எவ்வாறு சமாளிக்கப் போகின்றது என்பது சிக்கலான விடயமாகதான் இருக்கும்.

அரிசி விலை ஏற்றத்தினால் ஆட்சி கவிழ்ந்த வரலாறு இலங்கையில் உண்டு. சிங்கள மக்களின் முக்கிய உணவுப் பொருளான அரிசியை நியாய விலையில் கிடைப்பதை அரசு உறுதி செய்யாவிட்டால் இலகுவில் அரகலயப் போராட்டங்கள் போன்றவை வெடித்து விடும் என்பதை ஆட்சித் தரப்பு மறக்காமல் இருப்பது நல்லது.

## ஐரோப்பிய ஒன்றியத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

களுக்கும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் தலைவர்களுக்கும் இடையில் இணைய வழிக் கலந்துரையாடல் நடைபெற்றது.

இது தொடர்பில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன்வெளியிட்டுள்ளஅறிக்கையில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

"எமது கூட்டணி சார்பில் நானும், செல்வம் அடைக்கலநாதனும் மற்றும் சுரேன் குருசாமியும் ஐரோப்பிய ஒன்றியத்தின் தெற்காசியப் பிராந்திய இலங்கைக்குப் பொறுப்பான பிரதிநிகளுடன் இணைய வழிக் கலந்துரையாடலில் நேற்றிரவு ஈடுபட்டோம்.

முக்கியமாக ஜனாதிபதித் தேர்தலுக்குப் பிறகு இங்குள்ள நிலைமைகள் தொடர்பிலும், அடுத்து வரக்கூடிய நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பாகவும், அமையும் நாடாளுமன்றம் எவ்வாறு அமையக் கூடும் என்பது தொடர்பாகவும் கருத்துப் பரிமாற்றங்கள் நடைபெற்றன.

அதுதவிர இலங்கையின் பொருளாதார நெருக்கடிகள், அதைத் தீர்க்கக் கூடிய வகையில் புதிய ஜனாதிபதி இருப்பாரா? வரக்கூடிய அரசு இருக்குமா? 23 அமைச்சுக்களின் கூட்டாக உருவாகியுள்ள தேசிய மக்கள் சக்திக்குள் பொருளாதார நெருக்கடிகள் தொடர்பாக எவ்வாறான கருத்துக்கள் இருக்கின்றன, சர்வதேச உறவுகள் தொடர்பில் எவ்வாறான நிலைப்பாடுகள் இருக்கப் போகின்றன, இவர்கள் எல்லோரும் இணைந்து சரியான வழியில் செல்வார்களா? என்பது பற்றியும், தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினை என்பது தீர்க்கப்படுமா? தமிழ் மக்களுடன் அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்வதில் எவ்வளவு தூரம் இந்த அரசு விருப்புடன் இருக்கின்றது என்பவை தொடர்பிலும் கலந்துரையாடினோம்.

நாம் இந்த அரசின் இயலாமை பற்றியும் சுட்டிக்காட்டினோம். முக்கியமாக தேசிய இனப்பிரச்சினை என்ற ஒன்றில்லை என்ற தோரணையிலும், குறைந்த பட்சம் 13 ஆவது திருத்தம் கூட தேவையில்லை என்ற தோரணையிலும் அவர்கள் பேசி வருவது தொடர்பில் எடுத்துக் கூறியிருக்கின்றோம்.

கடந்தநாற்பதுவருடங்களுக்குமேலாக நடந்த போராட்டங்களிலும் போரிலும் இலட்சக்கணக்கான மக்கள் உயிரைப் பலி கொடுத்ததே தமிழ் மக்கள் ஒரு அரசியல் அதிகாரத்துடன் இந்தமண்ணில் வாழ வேண்டும் என்பதற்காக.

இந்த அரசியல் அதிகாரங்கள் தொடர்பில் அரசு எந்தவிதமான கரிசனையும் கொண்டதாகவும் தெரியவில்லை. இந்நிலை தொடருமானால் தமிழ் மக்களுக்கும் இந்த அரசுக்கும் இடையில் இடைவெளிதான் அதிகரிக்கும் என்பதையும் சுட்டிக்காட்டியிருக்கின்றோம்.

வரப்போகும் நாடாளுமன்றத் தேர்தலில் அறுதிப் பெரும்பான்மை கிடைத்தால் அல்லது மாறாக தொங்கு நாடாளுமன்றம் வந்தால் எப்படி நாட்டின் எதிர்காலம் இருக்கும் என்பது பற்றியும் கருத்தாடினோம்.

ஐரோப்பிய யூனியன் இலங்கைக்குப் பல்வேறுபட்ட உதவிகளைச் செய்து வருகின்றது. அதேநேரம் நல்லிணக்கம் தொடர்பான விடையங்களை முன்னெடுப்பதில் முக்கியமான பங்கினை ஆற்றி வருகின்றது. அந்த நல்லிணக்க நடவடிக்கைகள் ஒழுங்கான முறையில் முன்னெடுக்கப்படுகின்றதா என்ற கேள்வியும் எழுந்தது.

இங்கு நல்லெண்ணச் செயற்பாடுகள் எதுவும் திட்டமிட்ட வகையில் நடக்கவில்லை. யுத்தம் நடந்த இந்த மண்ணில் ஆயிரக்கணக்கான பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் இருக்கின்றன. அவர்களுக்கான நிவாரணப் பணிகள் எதுவும் நடக்கவில்லை. இதேபோல்காணாமல்போனோர் பற்றி எந்தவிதமான குறைந்தபட்ச நடவடிக்கையோ அல்லது பொறிமுறையோ உருவாக்கப்படவில்லை என்றும் சுட்டிக்காட்டியுள்ளோம்.

அநேகமாக எதிர்வரும் ஜனவரி மாதமளவில் மீண்டும் ஒருமுறை சந்தித்து இன்னும் விவரமாக இவை தொடர்பில் பேசலாம் எனவும் முடிவெடுக்கப்பட்டது."

– என்று சுரேஷ் பிரேமச்சந்திரன் குறிப்பிட்டுள்ளார்.

## சுன்னாகம் வாசி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சில காலம் இலங்கைச் சிறையில் இருந்து பின்னர் விடுதலையாகியுள்ளார்.

சிறையில் இருந்த சமயம் பாகிஸ்தான் மற்றும் ஈரான் நாட்டுக் கைதிகளுடன் இவருக்கு நட்பு ரீதியான பழக்கம் ஏற்பட்டுள்ளது.

சிறையில் இருந்து விடுதலையானவர் பாகிஸ்தான் மற்றும் ஈரான் நாட்டவர்களுடன் கூட்டிணைந்து மீண்டும் ஒரு நாசகார செயலுக்குத் திட்டமிட்டார் என்ற சந்தேகத்தின் அடிப்படையிலேயே கடந்த 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 2 மணிக்குச் சுன்னாகத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பில் இருந்து வந்த பயங்கரவாதத் தடுப்புப் பொலிஸ் பிரிவினரால் கைது செய்யப்பட்டவர் மேலதிக விசாரணைக்காகத் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

சுன்னாகம் சென் அந்தனீஸ் வீதியைச் சேர்ந்த யோகராஜா நிரோஜன் என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் என்று மற்றொரு செய்தி தெரிவித்தது.

# வரலாற்றுக் கடமை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்துக்கான முதன்மை வேட்பாளராகக் களமிறங்கியிருக்கும் சிறீதரன், தேர்தல் பிரசாரத்தை மேற்கொள்வதற்காக நேற்றுப் புதன் கிழமை நெடுந்தீவுக்கு விஜயம் மேற்கொண்டு, மக்களுடன் கலந்துரையாடும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“தீவக மக்கள் தமிழ்த் தேசிய அரசியள் களத்தில் ஊறித் திளைத்தவர்கள். தமிழ்த் தேசியக் கொள்கையே அவர்களது மாறாத நிலைப்பாடு. எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலிலும் அந்தக் கொள்கைக்கான ஆணையாகவே அவர்கள் தமது வாக்குகளைப் பிரயோகிப்பார்கள். இந்த மண்ணும், மக்களும் ஒருபோதும் விலைபோகமாட்டார்கள்.” – என்றார்.



















# யாழ். பொருளாதார மத்திய நிலையத்தை மீள ஆரம்பித்தல் குறித்து கலந்துரையாடல்

யாழ்ப்பாணம் பொருளாதார மத்திய நிலையத்தை மீள ஆரம்பித்தல் தொடர்பான ஆரம்ப கட்ட கலந்துரையாடல் மாவட்ட அரச அதிபரும் மாவட்ட செயலாளருமான மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் யாழ். மாவட்ட செயலக அரச அதிபர் அலுவலகத்தில் நடைபெற்றது.

யாழ். பொருளாதார மத்திய நிலையத்தை வர்த்தக நடவடிக்கைகளுக்காக மீள ஆரம்பிப்பது மற்றும் பொருளாதார மத்திய நிலையத்திலிருந்து விவசாயம் மற்றும் பழ வகைகள் போன்ற உள்ளூர் உற்பத்திப் பொருட்களை வெளி மாவட்ட பொருளாதார மத்திய நிலையத்துக்கும், ஏனைய இடங்களுக்கும் அனுப்பிவைத்தல் மற்றும் வெளி மாவட்ட உற்பத்திப் பொருட்களை யாழ். பொருளாதார மத்திய நிலையத்துக்கு எடுத்து வந்து சந்தைப்படுத்தல் போன்ற விடயங்கள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது.

இதன்போது கருத்துத் தெரிவித்த யாழ். மாவட்ட அரச அதிபர், அடுத்த கூட்டத்தில் இதனுடன் தொடர்புடைய வணிகர்கள், வர்த்தக சங்கப் பிரதிநிதிகள், பல்கலைக்கழக முகாமைத்துவ பீடத்தினர், நிபுணர்கள் மற்றும் உருளைக் கிழங்கு, வெங்காயம், வாழைக்குலை போன்ற விற்பனையில் ஈடுபடும் வியாபாரிகள் ஆகியோரை அழைத்து அவர்களின் மேலதிக ஆலோசனைகளையும் பெற்றுக்கொள்ளலாம் என்று குறிப்பிட்டார்.

இந்தக் கலந்துரையாடலில் பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர், சாவகச்சேரி பிரதேச செயலாளர், சாவகச்சேரி பிரதேச சபையின் செயலாளர், பொருளாதார மத்திய நிலைய முகாமையாளர், சாவகச்சேரி பொலிஸ் உத்தியோகத்தர், கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்கள உத்தியோகத்தர், வர்த்தகப் பிரதிநிதிகள், பொருளாதார மத்திய நிலையத்தில் கடைகளைக் குத்தகைக்கு எடுத்த குத்தகைக்காரர்கள் மற்றும் மாவட்ட செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர்.



# கண்டியில் ஆஸ்திரேலியப் பெண்ணிடம் 9 இலட்சம் ரூபா பணம், நகைகள் அபேஸ்



கண்டியில் உள்ள நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்தபோது தமது 9 இலட்சம் ரூபா பணமும் மூன்று தங்க மோதிரங்களும் திருடப்பட்டுள்ளன என்று ஆஸ்திரேலிய பெண் ஒருவர் கட்டுகஸ்தோட்டை பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

கடந்த 20ஆம் திகதி மாலை 4 மணியளவில் இரு பெண்களுடன் ஹோட்டலுக்குத் தான் வந்தார் எனவும், 21 ஆம் திகதி காலை அறைக்குள் யாரோ நுழைந்து இந்தத் திருட்டைச் செய்துள்ளனர் எனவும் தனது முறைப்பாட்டில் மேற்படி பெண் தெரிவித்துள்ளார்.

தனது சுகாதார அட்டை மற்றும் இரண்டு கிரெடிட் கார்டுகளும் திருடப்பட்டுள்ளன என்றும் அந்தப் பெண் கூறினார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் கட்டுகஸ்தோட்டை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ராஜபக்ஷ தலைமையில் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

# வாசிப்பு மாத இறுதி நிகழ்வும் பரிசளிப்பு விழாவும்

வலிகாமம் கிழக்கு பிரதேச சபை உரும்பிராய் பொது நூலகத்தின் தேசிய வாசிப்பு மாத இறுதி நிகழ்வும் பரிசளிப்பு விழாவும் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளன.

உரும்பிராய் கற்பக விநாயகர் மணி மண்டபத்தில் உரும்பிராய் உப அலுவலக பொறுப்பதிகாரி இ. சிவரூபன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட உதவி நூலகர் இரத்தினகுமார் குபேசன் பிரதம விருந்தினராகவும், உரும்பிராய் மேம்பாட்டு ஒன்றிய தலைவர் டாக்டர் வே.கணேசவேள், ஊரெழு கணேசா வித்தியாசாலை அதிபர் இரா. ஜெயக்குமார், உரும்பிராய் தெற்கு கிராம சேவையாளர் செ. வசந்தகுமார் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## சரியான மார்க்கம் எது?

தென்னிலங்கையில் அதிகார பீடம் மாறினாலும், அங்கு வருகின்ற ஆட்சியாளர்களின் அணுகுமுறைப் போக்கு மாறாது என்பதுதான் நிலைமை.

வழமையான முதலாளித்துவப் போக்குக் கொண்ட அதிகார பீடம் மாறி, இடதுசாரிப் பண்பியல்பு கொண்ட தரப்புக்கள் அரசைக் கைப்பற்றினாலும் கூட, தேசிய இனப் பிரச்சினை மற்றும் சிறுபான்மையினருடைய விவகாரங்களில் பௌத்த, சிங்கள அதிகார பீடத்தின் பார்வையும், நோக்கும், செயற்பாடும் மாறப்போவதில்லை என்பது தெளிவு.

காலம்காலமாக தென்னிலங்கை ஆட்சியாளர்கள் தேசிய இனப் பிரச்சினை விவகாரத்தை ஒட்டி கூறுகின்ற விடயத்தைத்தான் இப்போது ஆட்சிப் பீடத்தைக் கைப்பற்றி இருக்கும் அநுர குமார திஸநாயக்கவும் கூறி இருக்கின்றார்.

நேற்று திருகோணமலையில் பிரசாரக் கூட்டத்தில் அவர் வெளியிட்ட கருத்து, கொழும்பு ஆட்சிப் பீடத்தில் ஆட்சியாளர்கள் மாறினாலும், அந்தப் பதவிக்கு வரப்போகின்றவர்களைப் பீடித்திருக்கின்ற பௌத்த - சிங்கள மேலாதிக்க போக்கு மாறப்போவதில்லை என்பதை தெளிவுபடுத்தி நிற்கின்றது.

சிங்கள, தமிழ், முஸ்லிம் அனைவருக்கும் சமமான சட்டத்துடன் கூடிய நாட்டைக் கட்டியெழுப்ப அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படுவதாக ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க அங்கு தெரிவித்துள்ளார்.

“சிங்கள, தமிழ், முஸ்லிம் அனைவருக்கும் சமமான சட்டத்துடன் கூடிய ஒரு நாட்டைக் கட்டியெழுப்புவோம். இவ்வாறான நகர்வுகளுக்கு இடையூறான சட்டங்களை மாற்றியமைத்து, ‘நான் இலங்கையன்’ என்று அனைவரும் பெருமையுடன் கூறக்கூடிய நாட்டைக்கட்டியெழுப்புவோம்”-என்றும் அவர் கூறியுள்ளார்.

இந்தப் பத்தியில் நாம் ஏற்கனவே பல தடவைகள் சுட்டிக்காட்டிய ஒரு விடயம் சிறுபான்மையினரான தமிழர்கள் எதிர்பார்க்கும் நீதி அல்லது அவர்களது அபிலாசையாகும்.

சிங்களவர்களைப் போன்று தமிழர்களும் சம சட்டத்தையும், சம நீதியையும் எதிர்பார்த்துப் போராடுகின்றார்கள் என்பதற்கு அப்பால், தமிழர்களைப் பொறுத்தவரை ஒரு விடயம் உண்டு. அது, இந்த இலங்கை தீவின் வடக்கையும் கிழக்கையும் தமது பூர்வீகத் தாயகமாகக் கொண்ட தமிழர்கள் அந்த வடக்கிலும் கிழக்கிலும் தனித் தேசமாக - தனித் தேசிய அடையாளங்களோடு - வாழ்ந்தவர்கள், அந்த உரிமையை மீட்பதுவே அவர்களது வேணவாவாகும்.

அவர்கள் கேட்பது சிங்களவர்களுக்கு சமமான உரிமை அல்ல, அதையும் தாண்டித் தமது தாயகத்தில் தம்மைத் தாமே ஆளக்கூடிய தனித்துவமான உரிமையை ஆகும்.

இந்த நாட்டில் சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் இஸ்லாமியர்களுக்கும் ஒரே விதமான - சமத்துவமான - நீதி வேண்டும் என்பது ஒரு புறம் இருக்க, அதையும் தாண்டி தமிழர்கள் தங்கள் தாயகத்தில் தனித்துவமாகக் கொண்டிருந்த உரிமைகளை மீண்டும் நிலைநாட்டுவதுதான் அவர்களது அடிப்படை எதிர்பார்ப்பு.

சிங்களவர்களுக்கு சமத்துவமான நீதியைத் தமிழர்களுக்கும் வழங்குவோம் என்பதன் மூலம், தமிழர்களின் தனித்துவமான உரிமைகளை மறுக்க - மறைக்க - தென்னிலங்கை ஆட்சிப் பீடம் தொடர்ந்தும் முயற்சித்து வருகின்றது.

அதன் மறைபோக்கான கருத்துத்தான் திருகோணமலையில் வைத்து நேற்று ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவினால் முன்வைக்கப்பட்டிருக்கின்றது.

தமிழர்களுடைய தாயகத்தில் அவர்களுடைய தனித்துவமான உரிமைகளை அங்கீகரிப்போம் என்று ஓர் ஜனாதிபதி வேட்பாளர் கூறுவாரேயானால் அதுதான் அவர்ளின் சரியான மார்க்கமாக இருக்கும்.

# பெரியார், அம்பேத்கர் நடுவே விஜய் த.வெ.க. மாநாட்டு திடல் புகைப்படம்




தமிழக வெற்றிக் கழக மாநாட்டு திடலில் இடம்பெற்றுள்ள காமராஜர், பெரியார், அம்பேத்கர் ஆகியோருக்கு நடுவே விஜய் இடம்பெற்றுள்ள கட்- அவுட் புகைப்படங்கள் சமூக வலைதளங்களில் வைரலாகி வருகின்றன.

விக்கிரவாண்டி அடுத்த வி.சாலையில் எதிர்வரும் 27 ஆம் திகதி மாலை தமிழக வெற்றிக் கழகத்தின் முதல் மாநில மாநாடு நடைபெறவுள்ளது. மாநாட்டுக்கான ஏற்பாடு களை ஒப்பந்ததாரர்கள் இரவு பகலாக செய்து வருகின்ற னர்.

மாநாடு நுழைவாயிலில் கோட்டையின் மதில் சுவர் போல செட் அமைக்கப்பட்டு அதில் 2 யானைகள் முன்னங் கால்களை உயர்த்தி பிளிறும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. மேடை யில் 'வெற்றிக் கொள்கை திருவிழா' என்கிற வாசகத்துடன் பேனர் வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், மாநாட்டு திடலில் தலைவர்களின் பிரம்மாண்ட கட்–அவுட்கள் இடம்பெற்றுள்ளன. காமராஜர், தந்தை பெரியார், அண்ணல் அம்பேத்கர் ஆகியோரின் பிரம்மாண்ட கட்–அவுட்களுக்கு நடுவே தவெக தலைவர் விஜய்யின் கட்–அவுட்டும் இடம்பெற்றுள்ளது. இது தொடர்பான வீடியோக்கள், புகைப்படங்கள் சமூக வலைதளங்களில் வைரலாகி வருகின்றன.

முன்னதாக, த.வெ.க. மாநாடு குறித்து விஜய், கட்சித் தொண்டர்களுக்கு வெளியிட்ட அறிக்கையில்,

"மாநாட்டுப் பணிகளுக்கான குழுக்களும் தொகுதிப் பொறுப் பாளர்கள் பட்டியலும் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், நம் முதல் மாநில மாநாடான வெற்றிக் கொள்கைத் திருவிழாவின் ஏற்பாடுகளில் நீங்கள் தீவிரமாக இருப்பது எனக்குத் தெரியும். அரசியலை, வெற்றி–தோல்விகளை மட்டுமே அடிப்படையா கக் கொண்டு அளவிடாமல், ஆழமான அக உணர்வாகவும், கொள்கைக் கொண்டாட்டமாகவும் அணுகப் போகும் நம்முடைய அந்தத் தருணங்கள், மாநாட்டில் மேலும் அழகுற அமை யட்டும்.

அரசியல் களத்தில், வாய்மொழியில் வித்தை காட்டுவது நம் வேலை அன்று. நம்மைப் பொறுத்தவரை, செயல்மொழி தான் நமது அரசியலுக்கான தாய்மொழி. மாநாட்டுக் களப் பணிகளில் மட்டுமல்லாமல், நம் ஒட்டுமொத்த அரசியல் களப்பணிகளிலும் நாம் அரசியல்மயப்படுத்தப்பட்டவர்கள் என்ற ஆழமான எண்ணத்தை மக்கள் மத்தியில் நீங்கள் உண்டாக்குவீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது." என்று குறிப்பிட்டுள்ளார்.

# விஜயின் மாநாடு வெற்றியடைய வாழ்த்துகின்றார் திருமாவளவன்



"நடிகர் விஜய் கட்சி தொடங்கி முதல் முயற்சியாக மாநாடு ஒன்றை நடத்த இருக்கிறார். அந்த மாநாடு வெற்றியடைய மனதார வாழ்த்துகிறேன்."

– இவ்வாறு விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் திருமாவளவன் எம்.பி. தெரிவித்துள்ளார்.

புதுச்சேரி மாநில விடுதலை சிறுத்தை கட்சியின் அமைப் பாளர் தேவ பொழிலன் சகோதரர் பூபாலன் உருவப்பட திறப்பு விழா நேற்று நடைபெற்றது. இதில் அக்கட்சியின் தலைவர் திருமாவளவன் எம்.பி. கலந்து கொண்டார். பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

"புதுச்சேரி உட்பட தமிழகம் முழுவதும் மது ஒழிப்பு மகளிர் குழு ஒன்றை ஒன்றியம் தோறும் கட்டமைக்க திட்டமிட்டுள் ளோம். தேசிய அளவில் மது ஒழிப்பு கொள்கை வரையறுக்கப் பட வேண்டும். புதுச்சேரி போன்ற யூனியன் பிரதேசங்கள் நேரடியாக மத்திய அரசின் கட்டுப்பாட்டில் உள்ளன. அந்த யூனியன் பிரதேசம் மத்திய அரசின் அனுமதியோடுதான் மது வியாபாரத்தை செய்கிறது.

இதனால் ஏராளமான இளம் தலைமுறையினர் பாதிக் கப்படுகின்றனர். மனிதவளம் பாழாகிறது. ஆகவே மாநில அரசுகளுக்கான பிரச்சினையாக இதை நாம் சுருக்கி பார்த்து விட முடியாது. மது மற்றும் போதைப்பொருள் புழக்கம் தேசிய பிரச்சினை. எனவே தேசிய அளவில் இதனை அணுக வேண் டிய தேவை இருக்கிறது. அனைத்து தரப்பு ஜனநாயக சக்தி களும் ஒருங்கிணைந்து செயல்பட்டால் தேசிய அளவில் நம் மால் மது மற்றும் போதைப் பொருட்களை ஒழித்துக்கட்ட முடியும். புதுச்சேரியில் இட ஒதுக்கீட்டு முறை, முறையாக பின்பற்றப்படவில்லை.

இதனை நீதிமன்றங்களே கண்டித்திருக்கின்றன. எனவே எஸ்.சி, எஸ்.டி. சமூகத்துக்கான இட ஒதுக்கீட்டை பின்பற்ற வேண்டும். நீதிமன்ற உத்தரவுப்படி புதுச்சேரி மண்ணை சார்ந்த பெண்மணிகளின் பிள்ளைகளுக்கு சாதி சான்றிதழ் வழங்க புதுச்சேரி அரசு முன்வர வேண்டும். மக்களவை தொகுதி மறுசீரமைப்பில் பாதிக்கப்படும் நிலை ஏற்பட்டிருக்கி றது. எனவே மாநிலப் பிரதிநிதித்துவம் மக்கள் தொகை அடிப்படையில் மட்டுமே இருக்கக் கூடாது. அதற்கு வேறு சில அளவுகளும் தேவைப்படுகிறது என்பதனை தமிழக முதல்வர் ஸ்டாலின், ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு ஆகியோர் கருத்து தெரிவித்திருக்கிறார்கள். விடுதலை சிறுத் தைகள் கட்சியும் சுட்டிக்காட்டியுள்ளது.

எனவே தொகுதி மறுசீரமைப்பு என்பது மக்கள் தொகை என்ற ஒன்றை அளவுகோலை கொண்டதாக இருக்கக்கூடாது. தமிழகம் போன்ற தென்மாநிலங்கள் பாதிக்கப்படாத வகை யில் வரையறைகள் அமைய வேண்டும். விடுதலை சிறுத் தைகள் கட்சி எந்தவொரு சமூகத்துக்கும் எதிராக இதுவரை செயல்பட்டதில்லை. தொடக்கத்தில் இருந்தே விடுதலை சிறுத்தைகள் கட்சி அருந்ததியர் சமூகத்துக்கு எதிரானது என்பது போல ஒரு தோற்றத்தை உருவாக்கி வருகிறார்கள். அவர்களுக்கு உள்நோக்கம் இருக்கிறது.

நடிகர் விஜய் கட்சி தொடங்கி முதல் முயற்சியாக மாநாடு ஒன்றை நடத்த இருக்கிறார். அந்த மாநாடு வெற்றியடைய மனதார வாழ்த்துகிறேன்." – என்றார்.

# சீன ஜனாதிபதியுடன் பிரதமர் மோடி சந்திப்பு

## எல்லைப் பிரச்சினை தொடர்பில் விவாதிக்க இணக்கம்



பிரிக்ஸ் உச்சி மாநாட்டில் பங்கேற்க ரஷ்யா சென்ற பிரதமர் நரேந்திர மோடி, அங்கு சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங்கை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இந்தப் பேச்சுவார்த்தையின்போது, இந்தியா – சீனா எல்லைப் பிரச்சினைக்கான சிறப்புப் பிரதிநிதிகள் விரைவில் சந்திப்பது என்று இரு தலைவர்களும் ஒப்புக் கொண்டனர்.

இது குறித்து இந்திய பிரதமர் அலுவலகம் வெளியிட்ட செய்திக் குறிப்பில்,

“பிரதமர் நரேந்திர மோடி கசானில் நடைபெற்ற 16 ஆவது பிரிக்ஸ் உச்சி மாநாட்டின் இடையே சீன மக்கள் குடியரசின் ஜனாதிபதி ஜி ஜின்பிங்கை சந்தித்தார். அப்போது, இந்திய – சீன எல்லைப் பகுதிகளில் 2020 ஆம் ஆண்டில் எழுந்த பிரச்சனைகளுக்கு தீர்வு, படைகளை முழுமையாக விலக்கிக் கொள்வதற்கான சமீபத்திய ஒப்பந்தத்தை வரவேற்ற பிரதமர் மோடி, வேறுபாடுகள் மற்றும் மோதல்களை முறையாக கையாள்வதன் முக்கியத்துவத்தை சுட்டிக் காட்டினார்.

எல்லைப் பகுதிகளில் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையை நிர்வகிப்பதை மேற்பார்வையிடவும், எல்லைப் பிரச்சினைக்கு நியாயமான, பொறுப்புமிக்க மற்றும் பரஸ்பரம் ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வைக் கண்டறியவும், இந்தியா – சீனா எல்லைப் பிரச்சனைக்கான சிறப்புப் பிரதிநிதிகள் விரைவில் சந்திப்பது என்று இரு தலைவர்களும் ஒப்புக் கொண்டனர். இருதரப்பு உறவுகளை ஸ்திரப்படுத்தவும், மீண்டும் கட்டியமைக்கவும் வெளியுறவு அமைச்சர்கள் மற்றும் இதர அதிகாரிகள் நிலையிலான பொருத்தமான பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்படும்.

இரண்டு அண்டை நாடுகள் மற்றும் உலகின் இரண்டு பெரிய நாடுகள் என்ற முறையில் இந்தியா, சீனா இடையேயான நிலையான, கணிக்கக்கூடிய மற்றும் இணக்கமான இருதரப்பு உறவுகள், பிராந்திய மற்றும் உலகளாவிய அமைதி மற்றும் வளத்தில் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும் என்று இரு தலைவர்களும் உறுதிப்படுத்தினர்.

இருதரப்பு உறவுகளை திட்டமிட்ட மற்றும் நீண்டகால கண்ணோட்டத்தில் முன்னேற்ற வேண்டியதன் அவசியத்தை தலைவர்கள் சுட்டிக்காட்டினர். உத்தி சார்ந்த தகவல் தொடர்புகளை மேம்படுத்த வேண்டும் என்றும் வளர்ச்சிக்கான சவால்களை எதிர்கொள்ள ஒத்துழைப்பைக் கண்டறிய வேண்டும் என்றும் தலைவர்கள் உறுதிபூண்டனர்.” – என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்பின்போது, இந்தியாவும் சீனாவும் தங்களது தொடர்பு மற்றும் ஒருங்கிணைப்புடன் உறவை வலுப்படுத்த வேண்டும் என்று பிரதமர் மோடியிடம் சீன ஜனாதிபதி ஜின் பிங் கூறினார் என்று சீன அரசு ஊடகம் தெரிவித்துள்ளது.

## அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல்:

# தபால் மூலம் வாக்களித்தார் முன்னாள் ஜனாதிபதி ஒபாமா




அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் நவம்பர் மாதம் 5 ஆம் திகதி நடைபெற உள்ள நிலையில், அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி பராக் ஒபாமா தபால் மூலம் வாக்குச் செலுத்தியுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் நவம்பர் மாதம் 5 ஆம் திகதி நடைபெற உள்ளது. இதில் குடியரசு கட்சி சார்பில் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் போட்டியிடுகிறார். அதே சமயம், ஆளும் ஜனநாயக கட்சி சார்பில் துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸ் களமிறங்கியுள்ளார். தற்போது, தேர்தல் நெருங்கி வரும் சூழலில் இருவரும் தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில் அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி பராக் ஒபாமா, ஜனநாயகக் கட்சியின் நம்பிக்கை கமலா ஹாரிஸ். அமெரிக்கா அவரது தலைமையில் ஒரு புதிய அத்தியாயத்தைக் காண தயாராக இருக்கிறது என்று கூறி வருகிறார்.

இதனிடையே இது குறித்து அமெரிக்க முன்னாள் அதிபர் ஒபாமா தனது எக்ஸ் தளத்தில் ஒரு காணொலியை பதிவிட்டு, கருத்து வெளியிடுகையில்,

“அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலுக்கான எனது வாக்கை தபால் மூலம் செலுத்தினேன். இது என்னுடைய நண்பருக்கு ஹாய் சொல்வதுப் போல எளிமையாக இருந்தது. நீங்களும் என்னை போல தபால் மூலம் வாக்கு செலுத்த விரும்பினால், இப்போதே வாக்குச்சீட்டை மின்னஞ்சல் மூலம் பெற்றுக் கொள்ளுங்கள். நீங்கள் எதன் மூலம் எப்படி வாக்களித்தாலும், யாருக்கு வாக்களிக்கிறீர்கள் என்பதை மட்டும் தெளிவாக திட்டமிடுங்கள்.” என்று பதிவிட்டுள்ளார்.

# நாடு முழுவதும் பல பகுதிகளில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது

மத்திய கிழக்கு மற்றும் கிழக்கு ஐரோப்பாவில் நிலவும் இராணுவ நிலைமையைக் கருத்திற் கொண்டு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பிற்காக விசேட பாதுகாப்பு வேலைத்திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பாதுகாப்பு அமைச்சு மற்றும் பொது பாதுகாப்பு அமைச்சின் ஆலோசனைக்கமைய இந்த விசேட வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், சுற்றுலாத் தலங்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு அடிக்கடி வரும் நகரங்களின் பாதுகாப்பைப் பலப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வெலிகம, பண்டாரவளை மற்றும் எல்ல உள்ளிட்ட பல நகரங்களில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை இலங்கையில் இருக்கின்ற வெளிநாட்டவர்களுக்கான பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய அறிவித்துள்ளார்.




# நடமாடு தேங்காய் விற்பனை; தேங்காய் விலை குறைந்தது



நடமாடும் தேங்காய் விற்பனை வேலைத்திட்டம் ஒன்றைத் தெங்கு அபிவிருத்தி அதிகார சபை நேற்று முதல் ஆரம்பித்துள்ளது.

இந்ததிட்டத்தின்மூலம்100மற்றும்120ரூபாய்க்குத்தேங்காய்கள் சில்லறை விலைக்கு விற்பனை செய்யப்படவுள்ளதாக அந்த அதிகார சபை தெரிவித்துள்ளது.

பொதுமக்களுக்கு மலிவு விலையில் தேங்காய்களை விற்பனை செய்யும் நோக்கில் கொழும்பு, ஸ்ரீஜெயவர்தனபுர மற்றும் கடுவல மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளில் நேற்று ஆரம்பிக்கப்பட்டது.

இந்த வேலைத்திட்டத்தின் கீழ் திங்கள், புதன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் தலா 10,000 தேங்காய்களைச் சந்தைக்கு விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

அதன் பின்னர், நாளாந்தம் 5,000 தேங்காய்களைச் சந்தைக்கு வழங்க நடவடிக்கை எடுக்கவுள்ளதாகத் தெங்கு அபிவிருத்தி அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.

# பொதுத் தேர்தல் தொடர்பில் 537 முறைப்பாடுகள் பதிவு




பொதுத் தேர்தலுடன் தொடர்புடைய குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் இதுவரையில் 537 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதன்படி, தேர்தல் விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் 520 முறைப்பாடுகளும், 2 வன்முறைச் சம்பவங்களும், ஏனைய குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் 15 முறைப்பாடுகளும் கிடைக்கப் பெற்றுள்ளன என குறிப்பிடப்பட்டுள்ளது.

தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு 180 முறைப்பாடுகளும், மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு 337 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன.



# ஈரானிய பிரஜைகள் 10 பேருக்கு இலங்கையில் ஆயுள்தண்டனை

ஈரானிய பிரஜைகள் 10 பேருக்கு நீர்கொழும்பு மேல் நீதிமன்றத்தால் நேற்று ஆயுள்தண்டனை விதிக்கப்பட்டது.

மேல் நீதிமன்ற நீதிபதி பமில ரத்நாயக்கவால் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

2016 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் காலியை அண்மித்த கடற்பரப்பில் போதைப்பொருள்களுடன் கைது செய்யப்பட்ட 17 பேரில் 10 பேர் குற்றத்தை ஒப்புக்கொண்டுள்ளமையால் இவ்வாறு ஆயுள்தண்டனை விதிக்கப்பட்டுள்ளதுடன், ஏனைய 7 பேர் மீதும் அடுத்தகட்ட சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

காலியை அண்மித்த கடற்பரப்பில் விபத்திற்குள்ளான படகை சோதனைக்குட்படுத்திய போது போதைப்பொருள் என சந்தேகிக்கப்பட்ட 146 கிலோகிராம் பொருள்கள் அடங்கிய பொதியுடன் சந்தேகநபர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

பின்னர் நடத்தப்பட்ட சோதனையில் அந்த பொதியில் 48 கிலோ கிராம் ஹெரோயின் காணப்பட்டமை கண்டு பிடிக்கப்பட்டது.

# களனி பல்கலைக்கழக மாணவன் உயிரிழப்பு



களனி பல்கலைக்கழகத்தின் விடுதி கட்டடத்திலிருந்து தவறி வீழ்ந்து மாணவரொருவர் உயிரிழந்துள்ளார்.

கந்தேகம நிதிமாலியந்த பகுதியைச் சேர்ந்த 24 வயதான மாணவரே உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

களனி பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ பீடத்தில் நான்காம் ஆண்டில் கல்வி பயிலும் மாணவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.




# எல்பிட்டிய தேர்தல் பிரச்சாரம் நேற்று நள்ளிரவுடன் நிறைவு

எல்பிட்டிய பிரதேச சபை தேர்தலுக்கான அனைத்து பிரசார நடவடிக்கைகளும் நேற்று நள்ளிரவுடன் நிறைவடைந்தன.

எதிர்வரும் 26 ஆம் திகதி வாக்குப்பதிவு நடைபெற்று முடிவுகள் அறிவிக்கப்படும் வரை பிரசார நடவடிக்கைகளுக்கு தடை விதிக்கப்படுவதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதற்கமைய, தேர்தலில் போட்டியிடும் கட்சிகள், வேட்பாளர்கள் மற்றும் சுயேட்சை குழுக்கள் நேற்று நள்ளிரவிற்கு பின்னர் பிரசாரத்தில் ஈடுபடுவதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும் என ஆணைக்குழு அறிவுறுத்தியது.

எல்பிட்டிய பிரதேச சபை தேர்தல் எதிர்வரும் 26ஆம் திகதி நடைபெறவுள்ளது.

# மத்திய மாகாண தமிழ் வினாத்தாள் விவகாரம் தொடர்பில் விசாரணை




மத்திய மாகாண பாடசாலைகளில் தரம் 8 மற்றும் தரம் 9 இற்கான தமிழ் வினாத்தாள் தொடர்பான பிரச்சினை குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் ஆராய்வதற்காக ஐவர் அடங்கிய விசேட குழு நியமிக்கப்பட்டுள்ளதாக மத்திய மாகாண கல்விப் பணிப்பாளர் நிஹால் அழககோன் தெரிவித்துள்ளார்.

கடந்த 21ஆம் திகதி மத்திய மாகாண கல்வித் திணைக்களத்தால் சிங்கள மொழி மூல மாணவர்களுக்கு வழங்கப்பட்ட தமிழ் வினாத்தாளில் பிரச்சினை ஏற்பட்டது.

தரம் 9 மற்றும் தரம் 8 இற்கு ஒரேமாதிரியான வினாக்கள் அடங்கிய வினாத்தாள் வழங்கப்பட்டதே இதற்கான காரணமாகும்.

அதன்படி, தரம் 9 மாணவர்களுக்கு எதிர்வரும் 25ஆம் திகதி மீண்டும் தமிழ் வினாத்தாள் வழங்கப்பட்டு இரண்டாம் கட்டமாக பரீட்சை நடத்தப்படவுள்ளதாக மத்திய மாகாண கல்விப் பணிப்பாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

# இன்றைய ராசி பலன்கள் -24.10.2024




இன்றைய நாளை மகிழ்ச்சியுடன் கொண்டாடுவீர்கள். உங்களிடம் வெற்றி பெறவோம் என்ற உறுதி உள்ள காரணத்தால் நீங்கள் வெற்றியை எளிதில் அடைவீர்கள்.

உங்கள் பணிகளை நீங்கள் மகிழ்ச்சியாக செய்வீர்கள். பொதுவான விஷயங்களை பகிர்ந்து கொள்வதன் மூலம் சக பணியாளர்களிடம் ஒத்த உணர்வுகளை அனுபவிக்க இயலும்.

நீங்களும் உங்கள் துணையும் ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொள்வீர்கள். ஆக்கப்பூர்வமான பேச்சு வார்த்தை காரணமாக உறவில் நல்லிணக்கம் காணப்படும்.

இன்று நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும். உங்கள் கையிலிருக்கும் பணம் உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும். பணத்தை நீங்கள் பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். மன உறுதி காரணமாக நம்பிக்கையுடன் இருப்பீர்கள்.




உங்கள் திறமைகளை வெளிபடுத்த உகந்த நாள். முக்கிய முடிவுகள் எடுக்க சிறந்த நாள். இன்றைய நாளை சிறப்பாக பயன் படுத்திக்கொள்ளுங்கள்.

நீங்கள் உங்கள் பணிகளை திறமையாக கையாள்வீர்கள். புதிய வாய்ப்புகள் வருவதற்கான வாய்ப்புகள் உள்ளது. உங்கள் முயற்சிக்கு பலன் கிடைக்கும். நீங்கள் சிறப்புடன் பணியாற்றுவீர்கள்.

இன்று உங்கள் துணையுடன் அன்பாக இருப்பீர்கள். உறவில் காணப்படும் நல்ல புரிந்துணர்வே இதற்கு காரணம்.

நிதி வளர்ச்சி இன்று சிறப்பாக இருக்கும். உங்கள் சேமிப்பு உயரும். இன்றைய நாளை சிறப்பாக திட்டமிட்டு முன்னேற வேண்டும்.

இன்று நீங்கள் உற்சாகமாகவும் ஆற்றலுடனும் காணப்படுவீர்கள். உங்கள் ஆரோக்கியம் மிகவும் சிறப்பாக இருக்கும்.




எதிர்மறை எண்ணங்களை விலக்கி நேர்மறை எண்ணங்களை மேற்கொள்ள வேண்டும். நம்பிக்கையுடன் செயல்பட்டால் உங்கள் இலக்குகளில் வெற்றி காணலாம்.

தவறான புரிந்துணர்வு காரணமாக சக பணியாளர்களுடன் தகவல் தொடர்பில் பிரச்சினை காணப்படும். இது உங்கள் பணியின் வளர்ச்சியை பாதிக்கும்.

தவறான புரிந்துணர்வு மற்றும் அபிப்ராயம் காரணமாக உங்கள் துணையுடன் அமைதியின்மை காணப்படும்.

நீங்கள் சம்பாதிக்கும் பணத்தை குடுபத்திற்கு செலவு செய்வீர்கள். இன்று கணிசமான தொகை இழப்பதற்கு வாய்ப்பு உள்ளது.

இன்று அஜீரணக் கோளாறு காணப்படும். உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.




இன்று தவறுகள் செய்ய வாய்ப்புள்ளதால் புத்திசாலித்தனத்துடன் உங்கள் செயல்களை மேற்கொள்ளவேண்டும். பொறுமையும் உறுதியும் இன்று குறைந்து காணப்படும். இந்தப் பண்புகளை நீங்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

பணியிடச் சூழல் சிறப்பாக இருக்கும்.நீங்கள் பணியில் தவறுகள் செய்வீர்கள். இதனால் மேலதிகாரிகளின் அதிருப்திக்கு ஆளாவீர்கள்.

இன்று நீங்கள் அமைதியாக இருக்க வேண்டும். கடுமையான செயல்கள் மற்றும் உணர்ச்சி வசப்படுவதன் மூலம் உறவில் நல்லிணக்கம் பராமரிக்க இயலாது.

அதிகரிக்கும் செலவுகள் கவலை அளிக்கும். நீங்கள் பணத்தை சிறந்த முறையில் செலவிட வேண்டும். உங்கள் பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்ய வேண்டும்.

மன உளைச்சல் காரணமாக இன்று தொடை வலி ஏற்பட வாய்ப்புள்ளது.யோகா மற்றும் உடற்பயிற்சி மூலம் ஆரோக்கியமாக இருக்கலாம்.




தொலை தூர நண்பர்கள் மற்றும் கூட்டாளிகளின் ஆதரவைப் பெறுவீர்கள். அதிக பயணங்கள் மேற்கொள்வீர்கள்.

சக பணியாளர்களின் ஆதரவைப் பெறுவீர்கள். பணியில் உங்கள் முயற்சிக்கு நற்பெயர் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் இனிமையான வார்த்தைகளை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் உங்கள் துணையின் அன்பைப் பெறுவீர்கள்.

இன்று அதிக பண வரவு காணப்படும். உங்கள் சேமிப்பு உயரும். நீங்கள் பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

இன்று ஆரோக்கியமாக இருப்பீர்கள். ஆரோக்கியத்தில் எந்தக் குறைபாடும் இருக்காது. சில கடினமான சூழ்நிலைகள் காணப்பட்டாலும் நீங்கள் உற்சாகமான மன நிலையில் இருப்பீர்கள்.




இன்று நிறைய வாய்ப்புகள் கிடைக்கும். இந்த வாய்ப்பை நன்கு பயன் படுத்தி நற்பலன் காணுங்கள்.

நீங்கள் பொறுப்புடனும் அர்ப்பணிப்புடனும் பணியாற்றுவீர்கள். உங்கள் புரிந்துணர்வு சக்தி மூலம் நீங்கள் கடினமான பணிகளையும் எளிதாக செய்து முடிப்பீர்கள்.

உங்கள் துணையிடம் மகிழ்ச்சியாகவும் திருப்தியாகவும் இருப்பீர்கள். உங்கள் சமயோஜித புத்தியும் நேர்மறை எண்ணங்களும் இந்தச் சூழ் நிலையை உருவாக்கித் தரும்.

நிதி வளர்ச்சி சீராக இருக்கும். நீங்கள் இன்று உங்கள் குடும்ப நலனுக்காக செலவு செய்வீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்களிடம் இருக்கும் மன உறுதி காரணமாக நல்ல ஆரோக்கியத்தை பராமரிப்பீர்கள்.




உங்கள் தினசரி செயல்களை மேற்கொள்வதில் சற்று எச்சரிக்கை தேவை. உங்கள் வெற்றிப் பாதையின் குறுக்கே பதட்டமும் ஏமாற்றமும் காணப்படும்.

பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பது கடினமாக உணர்வீர்கள். உங்கள் பணிகளை மேற்கொள்வதில் தாமதம் காணப்படும்.

குறைவான புரிந்துணர்வு காரணமாக இன்று உங்கள் துணையுடன் சூடான வாக்குவாதம் ஏற்பட வாய்ப்புள்ளது.

இன்று நீங்கள் உங்கள் குடும்பத்திற்கு செலவு செய்வீர்கள். அது வீண் செலவாக இருக்கும். திட்டமிட்டு கட்டுப்பாட்டுடன் செலவு செய்வது உதவிகரமாக இருக்கும்.

இன்று கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளது. இது உங்களுக்கு கவலை அளிக்கும். உங்களை அதிகம் வருத்திக் கொள்ளாதிருக்க முயலுங்கள்.




இன்று அதிக கவலையுடன் காணப்படுவீர்கள். உற்சாகமாக இருக்க முயலுங்கள். எந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

உங்கள் பணிகளை முடிப்பதற்கு கூடுதல் கவனம் தேவை. அதிக பணிகள் காரணமாக பணியில் தவறுகள் நேர வாய்ப்புள்ளது. திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

இன்று நீங்கள் சகஜமான உறுதியான அணுகுமுறை மேற்கொள்வது நல்லது. இதனால் நல்லுறவை அனுபவிக்க இயலும்.

இன்று பண இழப்பிற்கான வாய்ப்பு உள்ளது. தேவையற்ற செலவுகள் ஏற்படும். எனவே கவனமாக இருக்க வேண்டும்.

இன்று ஆரோக்கியமாக இருக்க யோகா அல்லது உடற்பயிற்சி மேற்கொள்ளுங்கள். இன்று இருமல் பிரச்சினையால் அவதிப்பட நேரலாம்.

# இன்றைய ராசி பலன்கள் -24.10.2024

## தனுசு

சுய முயற்சி மூலம் நீங்கள் உங்கள் இலக்குகளை அடையலாம். எந்த செயலையும் நம்பிக்கையுடன் செய்யுங்கள்.

பணியிடத்தில் உங்கள் மேலதிகாரிகளின் நம்பிக்கையைப் பெறுவீர்கள். கடின உழைப்பிற்கான பாராட்டு கிடைக்கும்.

உறவில் நல்லிணக்கம் காணப்படும். இது மேலும் வளரும். உங்கள் துணை சம்பந்தமான இன்றைய நிகழ்வுகள் உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும்.

இன்று பணப்புழக்கம் சிறப்பாக இருக்கும். சேமிப்பதற்கான வாய்ப்பு அதிகம் காணப்படுகின்றது.

இன்று ஆரோக்கியத்தில் பெரிய பிரச்சினை ஏதும் இருக்காது. நீங்கள் துடிப்புடனும் உற்சாகமாகவும் இருப்பீர்கள்.

## கும்பம்

இன்றைய முக்கியமான விஷயங்களை வேறு நாளைக்கு தள்ளிப் போடுங்கள். சுய முயற்சியில் நீங்கள் மனப் போராட்டங்களை சந்திப்பீர்கள்.

நீங்கள் இன்று உங்கள் பணியில் தவறுகள் செய்ய வாய்ப்புள்ளது. எனவே உங்கள் மேலதிகாரிகளின் கோபத்துக்கு ஆளாக நேரலாம்.

உங்கள் துணையுடன் சுமூகமான உறவு காணப்படாது. குடும்பப் பிரச்சினை காரணமாக தேவையற்ற மோதல்கள் ஏற்படும்.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்காது. இன்று ஏற்ற இறக்கங்கள் காணப்படும். இன்று நீங்கள் கவனமாக இருக்க வேண்டியது அவசியம்.

நீங்கள் தோல் சம்பந்தப்பட்ட பிரச்சினையால் பாதிக்கப்படலாம். வறுத்த கார உணவு வகைகளை உட்கொள்வதை தவிர்க்கவும்.

## மகரம்

இன்று கடினமான சவால்களை சந்திக்க நேரலாம். ஆன்மீக ஈடுபாடு ஆறுதலை அளிக்கும்.

பணிகள் அதிகமாக காணப்படும். சில சவாலான சூழ்நிலைகளை சந்திக்க நேரும். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

உங்கள் துணையுடன் அமைதியின்மையை உணர்வீர்கள். நீங்கள் உங்கள் துணையுடன் வெளிப்படையான அணுகுமுறை மேற்கொள்ள வேண்டும்.

உங்கள் கையில் அதிக பணம் காணப்படாது. மேலும் மருத்துவ செலவுகளை நீங்கள் மேற்கொள்ள நேரும்.

இன்று தோல் எரிச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது. கார உணவுகளை தவிர்ப்பது நல்லது.

## மீனம்

இன்று உங்களுக்கு சாதகமான நாள் அல்ல. இன்று கவலையுடன் காணப்படுவீர்கள். எனவே கவனமாக இருக்க வேண்டும். இந்த விஷயத்தையும் லேசாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

இன்று பணிகளைக் கையாள்வது அவ்வளவு எளிதாக இருக்காது. இன்று சுமூகமான நாளாக இருக்க நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க நேரும். உங்கள் பணிகளை கவனமுடனும் நம்பிக்கையுடனும் மேற்கொள்ளுங்கள்.

உங்கள் துணையுடன் நல்லுறவு பராமரிக்க இயலாது. இன்று உங்கள் நண்பர்களின் தவறான ஆலோசனை கேட்டு நடப்பீர்கள்.

நிதிநிலைமை சிறப்பாக இருக்காது. சேமிப்பதற்கான வாய்ப்பு குறைவு. இது உங்களுக்கு கவலை அளிக்கும்.

குழந்தைகளின் ஆரோக்கியம் பற்றிய கவலை இருக்கும். உங்கள் குழந்தைக்கு தகுந்த மருத்துவம் தேவை.

OUR HISTORICAL ACHIEVEMENTS IN JAFFNA
- FACULTY OF BIO SYSTEM TECHNOLOGY UNI. OF JAFFNA - KILINOCHCHI
- CLINICAL TRAINING AND RESEARCH CENTRE FACULTY OF MEDICINE - JAFFNA
- FACULTY OF ENGINEERING UNIVERSITY OF JAFFNA
- COURT COMPLEX AT CHAVAKACHCHERI
- FACULTY OF AGRICULTURAL UNIVERSITY OF JAFFNA
- RDO OFFICE - JAFFNA
- WATER BOARD BUILDING - JAFFNA

Blue Ocean GROUP OF COMPANIES
KELSEY HOMES 40 Years Housing Excellence
S.Thumilan Group Chairman
CENTRAL PARK
15 ACRES LARGEST GATED HOUSING DEVELOPMENT IN JA-ELA
HEAD OFFICE: No. 9A, De Fonseka Place, Bambalapitiya, Colombo 04. Tel : +94 112 582 582 | Hotline : +94 777 546 546
JAFFNA OFFICE: No. 21/1, Kerathivu Road, Navatkuli, Jaffna. Mobile : +94 76 690 9949 | Mobile : +94 771 546 539

Northern PC Park
வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில் 15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
#10 Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
info@pcpark.co www.pcpark.co
Hot Line :- 077 777 1545
077 757 0124 | 075 555 7327 | 021 567 5566 | 021 222 9581
077 336 6443 | 071 777 2377 | 021 222 2050 | 021 222 0388
Northern Pc Park | Npcpark | northernpcpark | Northern PC Park